பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 20 வெள்ளிக்கிழமை 11.07.2025 கதிர் 244

## இனி இது ரகசியம் அல்ல!

என் பி பி ஆளும்தரப்பு அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவோம் என்று மக்களுக்கு மேடை ☞2

# ஆர்.ரி.ஐ. ஆணைக்குழுவிற்கு தலைவர் இல்லை ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் ஆழ்ந்த கவலை

தகவலறியும் உரிமைக்கான (ஆர்.ரிஜ) ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பதில் நிலவும் காலதாமதம் குறித்து ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

2025 ஜூலை 9 நிலவரப்படி, இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு இன்னும் முறையாகத் தலைவர் நியமிக்கப்படவில்லை. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றநீதிபதி உபாலி அபயரத்னமார்ச் 2025இல் பதவி விலகியதிலிருந்து இந்தப்பதவி வெற்றிடமாகவே உள்ளது. ஆணைக்குழுவின் செயற்பாட்டிலும், மக்களின் தகவல் அறியும் உரிமையைப் பாதுகாப்பதிலும் தலைவரின் பங்கு மிக முக்கியமானது என்பதால், இந்த நியமனத்தை விரைந்து மேற்கொள்ளுமாறு சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் இருந்தபோதிலும், நியமனத்தில் ஏற்பட்டுள்ள இந்த தேவையற்ற தாமதம் நியாயமான சந்தேகங்களை எழுப்புகிறது.

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு தனது உகந்த வினைத்திறனுடன் செயற்படவும், பல்வேறுபட்ட கருத்துக்களையும் நிபுணத்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவும் ஐந்து ஆணையாளர்களைக்கொண்டிருக்க வேண்டும் என தகவலறியும் உரிமைச் சட்டம் வலியுறுத்துகிறது. எனவே, தலைவர் உட்பட முழுமையான உறுப்பினர்களைக் கொண்டிருப்பது ஆணைக்குழுவுக்கு அத்தியாவசியமானது.

மேன்முறையீடுகளைவிசாரித்தல், குற்றம் சாட்டப்பட்ட குற்றங்களை ஆராய்ந்து வழக்குத் தொடர்தல், ஆவண முகாமைத்துவம் மற்றும் முன்கூட்டியதகவல்களைவெளியிடுதல் தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்குதல், சட்ட அமுலாக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் சீர்திருத்தங்களுக்கானபரிந்துரைகளை வழங்குதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விரிவான அதிகாரங்களையும் ☞2

## 30 சதவீத வரியையும் திருத்த அமெரிக்காவிடம் கேட்போம்

நிதி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

ஆசிய வலய நாடுகளுக்கு விதிக்கப்படும் தீர்வை வரி வீதத்தை அவதானித்து தற்போது விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத தீர்வை வரி திருத்தத்துக்கான யோசனைகளை ☞2

## அமெரிக்காவின் வரிக்கு எப்படி முகங்கொடுப்பீர்?

ஆளும்தரப்பிடம் சஜித் பிரேமதாச கேள்வி

அமெரிக்காவின் தீர்வை வரிக்கு ஆளும்தரப்பு எவ்வாறு முகம் கொடுக்கப்போகிறது?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் ☞2

## எந்த நிபந்தனைகளின் கீழாக அமெ. வரி குறைக்கப்பட்டது?

அமெரிக்கஜனாதிபதியினால்இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த பரஸ்பர தீர்வை வரி ஓரளவேனும் குறைக்கப்பட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரம் வரியை குறைக்காமல் இருப்பதற்கு எந்த காரணமும் இல்லை. வரி குறைக்கப்பட்டுள்ளபோதும் அதற்கான நிபந்தனைகள் என்ன என்பது தொடர்பில் இதுவரை வெளியாகவில்லையென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் ☞2

## அமெரிக்க வரி விதிப்பால் தொழில் பிரச்சினை வராது

எதிர்வுகூறுகிறார் தம்மிக்க

அமெரிக்கா அறிவித்துள்ள புதிய வரி நிலைமை தொழில் பாதுகாப்புப் பிரச்சினையைப்பெருமளவில்ஏற்படுத்தாது. ஆனால் புதிய முதலீட்டாளர்களை அதிகளவில் கவர வேண்டிய தேவை காணப்படுகிறது. எனவே ஆளும்தரப்பு அதற்குரிய துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் தம்மிக பெர்னாண்டோ ☞3

# சிந்துப்பாத்தி புதைகுழி குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

## ஜூலை 15 விவரங்கள் வெளிவரும்





அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில்தோண்டப்பட்டுவரும்செம்மணி மனிதப்புதைகுழியில்இருந்து இதுவரையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான அறிக்கையை ஜூலை 15 நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு நீதிவான் ஆனந்தராஜா, அகழ்வுப் பணிகளை முன்னெடுத்த பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு ☞2

## அமெரிக்க வரி தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடல்

அமெரிக்க ஆளும்தரப்பால் விதிக்கப் பட்டிருக்கும் புதிய தீர்வை வரிக்கொள்கை தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும்இலங்கைதூதுக்குழுவிற்கும் இடையே நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கையின்உற்பத்திபொருட்களுக்கு 30 வீத பரஸ்பர தீர்வை வரியை அறவிடவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தையடுத்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தனது நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற நாடுகளுக்கு வர்த்தக இடைவெளியை அடிப்படையாகக்கொண்டு இலங்கையின் உற்பத்தி பொருட்களுக்கு 30 வீத பரஸ்பர தீர்வை வரியை அறவிடவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அமெரிக்க ஜனாதிபதியின் கையொப்பத்துடன் வெள்ளை மாளிகையால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துவிதமான பொருட்களுக்கும்30வீததீர்வை வரிஅறிவிடப்படவுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க ஜனாதிபதியால் இலங்கை மீது 44 வீத தீர்வை வரி விதிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது.

நாடுகளிடையே நிலவிய சமநிலையற்ற வர்த்தகத்தை சீர்ப்படுத்தும் நோக்கில் தீர்வை வரிகளை அறிவிடவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ☞2

## மின்சார சபை திருத்தச் சட்டத்தால் எந்த வகையிலும் நன்மை இல்லை

ஐ.தே.கவின் அஜித் பெரேரா எம்.பி. தெரிவிப்பு

தேசியசொத்துக்களைபாதுகாக்கும்அதேவேளை, மின்சாரக் கட்டணத்தை குறைக்கக் கூடியவாறு புதிய மின்சார சபை சட்டம் தயாரிக்கப்படும் என்று ஆளும்தரப்பால்வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால் ஆளும்தரப்பு அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளது. திருத்தப்பட்ட சட்ட மூலம் மின்சார சபைக்கோ, அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில்புதன்கிழமைசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சார சபையைப் பங்குகளாகப் பிரித்து அவற்றைச் சிறிய பிரிவுகளின் கீழ் உள்ளடக்குவதற்கு கடந்த ஆளும்தரப்பால் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அந்த மின்சாரசபை சட்டத்தை மீண்டும் திருத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய மின்சாரசபை சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய ☞3

## வரி குறித்து அமெ.வுடன் மீண்டும் பேசவேண்டும்

ஹர்ஷ டி சில்வா எம்.பி. வலியுறுத்து

இலங்கைக்கு விதிக்கப்பட்ட வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைப்பதாக அமெரிக்கா அதிகரித்துள்ளமை வரவேற்கத்தக்கவிடயமாகும். இதனைச்சிறந்த தொடக்கமாகக் கருதி மீண்டும் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வேண்டும். அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் ஆளும்தரப்புக்கு முழுமையானஒத்துழைப்பினைவழங்கத்தயாராகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ☞3

## பாடப்புத்தக நிபுணர்களை நம்பினால் அதோகதிதான்

சஜித் பிரேமதாச விசனம்

ஆளும்தரப்பு வெறுமனே பாடப்புத்தகநிபுணர்களை மாத்திரமே நம்பியிருப்பதால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களுக்கு அமெரிக்கா இலங்கை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் சிறந்த உதாரணமாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிசனம்வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப் படும் பொருட்களுக்கு 30 சதவீத வரியைநிர்ணயித்துவெள்ளை ☞3

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மேடையாக ஏறி வாக்குறுதியளித்தது. ஆனால் அதிகாரத்தைப் பிடித்ததுமே சட்டத்தில் பிரச்சினை இல்லை அதனைப் பயன்படுத்துவோரே பிரச்சினையானவர்கள், சரியானவர்கள் கைகளில் இந்தச் சட்டம் இருக்கும்போது எல்லாம் சரியாக நடக்கும் என்றார்கள். அதுவே அப்போது மிகப் பெரும் சர்ச்சையாக வெடித்தது. ஆனால் பின்னர், அந்தச்சட்டத்தைநீக்கிவிட்டுஅதற்குப்பதிலாகப் புதிய சட்டங்களைக் கொண்டுவருவதுதான் தமது நோக்கம் என்று கூறிச் சமாளித்தார்கள். இப்போது, இன்னும் சில மாதங்களில் அந்தச் சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தைக் கொண்டு வருவோம் என்கிறார்கள்.

இந்த நிலையில் சமூக ஊடகங்கள் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான எதிர்ப்பை வெளிப்படுத்தியதாகக் கூறப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (ஊணவீபு) கீழ் 9 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இளைஞர் இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். விசாரணையின் போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் எந்தக் குற்றமும் செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டதாக நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையில், தெஹிவளை காவல்துறை ஜுலை09நீதிமன்றத்தில்தனது அறிக்கையை சமர்ப்பித்து, சந்தேகநபருக்குகல்கிசைமேலதிக நீதிவான் பிணை வழங்க ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தது.

காவல்துறையினர் முன்னதாக மே 27, 2025 அன்று சட்டமா அதிபரிடம் இது தொடர்பில் ஆலோசனை கேட்டிருந்தனர், ஆனால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் சந்தேகநபருக்குப் பிணை வழங்க நீதிவான் மறுத்திருந்தார்.

சந்தேக நபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீறியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகப் பொலிஸார் முன்பு கூறியது ஏன் என்றும், ஒன்பது மாதங்களுக்குப் பிறகு அத்தகைய குற்றம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று இப்போது கூறுவது ஏன் என்றும் காவல்துறையினரிடம் நீதிவான் கேள்வி எழுப்பினார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மாவனெல்லைச் சேர்ந்த 21 வயதான மொஹமட் ரிஃபாய் மொஹமட் சுஹைல், கடந்த ஆண்டு ஒக்டோபர் 25 தெஹிவளை காவல்துறையினரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அண்மையில் இவர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் முஜிபுர் ரஹ்மான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் குறித்தும் கடுமையான விமர்சனங்களை எழுப்பியிருந்தார். இந்த நிலையில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

என்பிபி ஆளும்தரப்பு சொன்னதைப் போலப்பார்த்தால்சட்டம்நல்லதுதான் ஆனால் இந்த ஆட்சியாளர்கள்தான் கெட்டவர்கள் போலும்அதனால்தான் குற்றச்சாட்டு எதுவுமே இல்லாமல் ஒரு இளைஞர் 9 மாதங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். இப்போதே இப்படியென்றால் இந்தப் பயங்கரவாதத்தடைச்சட்டம்போர்க்காலத்தில் தமிழர்களுக்கு எதிராக எப்படியெல்லாம் கெட்டவர்களின் கைகளில் இருந்த கெட்ட சட்டமாக கைவரிசையைக் காட்டியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிந்துப்பாத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிடப் பட்டுள்ளது.

சிந்துப்பாத்தி, மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத் தோண்டல் பணிகள் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டன. தொடர்ந்து 15 நாட்களாகப் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், அதில் பணியாற்றியவர்களுக்கு ஓய்வுவழங்கும்வகையிலும்இதுவரையிலான பணிகள் தொடர்பில் அறிக்கைகளைத் தயாரிக்கும் வகையிலும் 10 நாள்களுக்கு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஜுலை 21 பணிகள் மீண்டும் தொடங்கவுள்ளன.

இதற்கிடையில் ஜுலை 15 இதுவரையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பிலான அறிக்கையை நீதிமன்றத்தில் முன்வைக்கும்படி பேராசிரியர் சோமதேவாவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் எத்தனை ஆண்களுக்குரியவைபெண்களுக்குரியவை சிறுவர்களுக்குரியவை என்பதுடன் அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள், எவ்வளவு காலத்திற்கு முன்பாக இந்த எலும்புக்கூடுகளுக்குரியவர்கள்புதைக்கப்பட்டிருப்பார்கள், எலும்புக்கூடுகள் தவிர கண்டெடுக்கப்பட்ட சான்றாதாரங்கள் எவை என்பன குறித்த விவரங்கள் அவரது அறிக்கையில் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரையில் 65 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட அகழ்வு பணியின் 15ஆம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதுவரையில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மனித புதைகுழியில் இருந்து 63 எலும்பு கூடுகளும், 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' மனித புதைகுழியில் இருந்து இரண்டு எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' புதைகுழியில் குழப்பகரமான முறையில் மனித எலும்புகள், குவிந்து சிதிலங்களாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அதில் உள்ள எலும்புகள் ஒருவருடையதா அல்லது பலருடையதா என்பது தொடர்பில் ஆராய்ந்து நீதிமன்றிக்குஅறிக்கையிடுமாறுசட்டவைத்திய அதிகாரிகக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்பு கூட்டு தொகுதிகள் அனைத்தும் சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட , பை , காலணிகள் , கண்ணாடி வளையல்கள் , ஆடையை ஒத்த துணிகள் , பொம்மை உள்ளிட்ட பொருட்கள் சான்று பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு , நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்க வரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தார்.பின்னர் பல நாடுகள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தமையால் அது 90 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது புதிய வரி வீதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இலங்கையுடன் நியாயமான மற்றும் பரஸ்பர வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு உறுதியளிப்பதாக வெள ளை மாளிகை வெள யிட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வர்த்தகக் குறைபாடுகள் நிலவுகின்ற போதிலும் புதிய கொள்கைகளின் ஊடாக இலங்கையுடன் தொடர்ந்தும் பொருளாதார தொடர்புகளை பேணுவதற்கும் அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரி மற்றும் வரியற்ற கொள்கைகளே பொருளாதார சமநிலையற்ற தன்மைக்கு காரணமாகுமெனவும் அமெரிக்க ஜனாதிபதியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே 30 வீத தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையால்அமெரிக்காவிற்கானதீர்வைவரி அதிகரிக்கப்பட்டால் அறிவிக்கப்பட்ட வரி வீதம் மேலும் அதிகரிக்கப்படுமெனவும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.ஏனைய சில ஆசிய நாடுகளுக்கும் அமெரிக்காவினால் பரஸ்பர தீர்வை வரி வீதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த பின்னணியில் அமெரிக்க ஆளும்தரப்பால் விதிக்கப்பட்டிருக்கும் புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இலங்கை தூதுக்குழுவிற்கும் இடையே நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க வர்த்தகம் வணிகம் உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின்செயலாளர்கே.ஏ. விமலேந்திராஜா ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமெரிக்காவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர தீர்வை வரியை விதித்துள்ளார். இது நாட்டின் ஏற்றுமதிகளின் மீது கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இதனை ஆளும்தரப்பு எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆடை, தேயிலை, இறப்பர், தகவல் தொழில்நுட்பம்மற்றும்மீன்பிடித்துறைகளுக்கு கடுமையான எதிர்மறையான தாக்கத்தை இது கொண்டுவரும். நமது நாட்டின் ஏற்றுமதியில் 26.4 சதவீத பங்களிப்பைப் பெற்றுத் தரும் ஏற்றுமதி தலமாக அமெரிக்கா திகழ்ந்து வருகிறது. 2024 ஆம் ஆண்டில் நமது நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 3.8 பில்லியன் டொலர்கள் ஆகும். 30 சதவீத தீர்வை வரி விதிக்கப்படுவதால் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

நமது நாட்டின் ஆடை ஏற்றுமதியில் 60 சதவீதம் அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த வரி விதிப்பால் நாட்டிற்கு வரும் கொள்வனவுகளுக்கான கேள்வி 30-40 சதவீதம் வரை குறையும். இது இறப்பர் மற்றும் தேயிலைத் துறைகளின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டிற்குள் வரும் டொலர்களின் அளவைக் குறைத்து, ரூபாவின் மதிப்பு குறைவதற்கும் வழிவகுக்கும். இதன் மூலம் பணவீக்கத்திற்கு வழிவகுத்து இறக்குமதிச் செலவுகளை அதிகரிக்கக்கூடும்.

இது தவிர, ஆடைத் துறையில் சுமார் 350,000 பேர் பணிபுரிவதால், இந்த வரிகள் விதிக்கப்படுவது வேலைப் பாதுகாப்பிற்கு மரண அடியை ஏற்படுத்தும். நமது நாட்டை ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு மையமாகப் பேணிச் செல்வதற்கு கடுமையானதொரு தடையாக இந்த வரி விதிப்பு அமைந்து காணப்படும்.

இந்த கட்டமைப்பு சார் வர்த்தக நிலுவை தொடர்ந்து நீடித்து வரும். ஏற்றுமதி இடங்களை பல்வகைப்படுத்துவதன் மூலமே இதைத் தவிர்க்கலாம். விதிக்கப்பட்ட 44 சதவீத வரியிலிருந்து 30 சதவீதமாக குறைக்கப்பட்டமையானது நமது நாட்டில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று பலர் கருதினாலும், இந்தளவு உயர் மட்ட தீர்வை வரியை விதிப்பதானது நமது நாட்டிற்கு பெரும் பாதகங்களை கொண்டு வரும். இதனால் வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும். ஆடைத் துறையில் நாம் கொண்டிருக்கும் உயர் தயாரிப்பு நாமத்தை இழக்கும் நிலை ஏற்படலாம். பெறுமதி சேர் தேயிலை மற்றும் இறப்பர் சார்ந்த பொருட்களுக்கும் இதனால் பெரும் தாக்கம் ஏற்படும்.

தற்போதைய ஆளும்தரப்பு இந்தப் பிரச்சினையைக் கண்டு, நமது நாட்டிற்கு சிறந்த தீர்வைக் காண தன்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கிறதா என்ற கேள்வி எம்மத்தியில் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினை எழுவதற்கு முன்பே, ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வெற்றியைத் தொடர்ந்து என்ன நடக்கப்போகிறது என்பது குறித்து நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரசாங்கத்திற்கு நாம் எச்சரிக்கை விடுத்தோம். நாட்டுக்காக மக்களுக்காக, ஏற்றுமதித் துறைக்காக இராஜதந்திர ரீதியான கடமை இதில் நிறைவேற்றப்பட்டதா என்பதில் பிரச்சினை காணப்படுகிறது. இருநாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் சரியாக பின்பற்றப்பட்டதா என்பதிலும் பிரச்சினை இருக்கிறது.

செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களுடன், குறிப்பாக இலங்கையுடன் உறவுகளைக் கொண்டவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். அவர்கள் மூலம் அமெரிக்க அரசாங்கத்தின் மீது அதிகபட்ச அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். வரிச் சட்டத்துக்கு இரு அவைகளிலும் குறைந்த பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்டதால், நமது நாடு இந்த சூழ்நிலைகளைச் சரியாக பயன்படுத்திக் கொண்டு பொருத்தமான செல்வாக்கை பிரயோகிக்க வேண்டும். இந்த வாய்ப்பை ஆளும்தரப்புமுறையாகப்பயன்படுத்தியுள்ளதா என்ற கேள்வி உள்ளது. உலக வர்த்தக அமைப்பின் மூலம் செலுத்தக்கூடிய அழுத்தம் முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வியும் காணப்படுகின்றது.

இந்த தீர்வை வரிகள் விதிக்கப்படுவது நமது நாட்டின் பல்வேறு துறைகளின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தப் பிரச்சினைக்கு ஆளும்தரப்பு வழங்கும் பதில்களும் தீர்வுகளும் என்ன ? தொழில் இழப்புகள் மற்றும் தொழிற்சாலைகளை மூடுதல் என்பன சமூகப் பேரழிவை உருவாக்கக்கூடும்.இதுவறுமைஅதிகரிப்பதற்கு காரணமாகவும் அமையும். இதுபோன்ற சூழ்நிலையில், இந்தப் பிரச்சினைக்கான தெளிவான தீர்வை அரசாங்கத்திடமிருந்து அறிந்து கொள்வது எமக்கு முக்கியம் . எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்கும், மக்களுக்கும், ஏற்றுமதித் துறைக்கும் தன்னால் முடிந்த அதிகபட்ச ஒத்துழைப்பை இதற்குப் பொற்றுத் தரும் என்றார்.

## ஆர்.ரி.ஐ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமைகளையும் கொண்ட ஊழல் எதிர்ப்பு சூழலியலில் மிக முக்கியமான சுயாதீன பொது நிறுவனங்களில் ஒன்றாக இந்த ஆணைக்குழு திகழ்கிறது.

தற்போது, ஆணைக்குழுவில் சட்டத்தரணி கிஷாலி பிண்டோ-ஜயவர்தன, சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி, ஏ.எம். நஹியா மற்றும் 2025 மே மாதம் புதிதாக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என். சமரகோன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதன் மூலம் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களில் நால்வர் பதவியில் உள்ளனர்.

இந்தத் தாமதத்திற்கான காரணங்கள் பொதுவெளியில் அறியப்படாத அதே வேலை, ஆணைக்குழுவிற்கு மீதமுள்ள நியமனமாக தலைவர் நியமிக்கப்பட வேண்டிய நிலையில், சட்டத்தின் 12(2) ஆம் பிரிவின்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளவாறு, ஜனாதிபதிக்கு தனது பரிந்துரைகளைச் செய்யும்போது, ஏனைய தகைமைகளுடன், பொது வாழ்வில் தம்மை தனித்துவப்படுத்திக் காட்டிய நபர்களைப் பரிந்துரைக்குமாறு அரசியலமைப்புப்பேரவையைட்ரான்பேரன்ஸி வலியுறுத்துகிறது.

ட்ரான்பேரன்ஸி நிறுவனமானது, ஜனாதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையையும், இலங்கையில் ஊழல் எதிர்ப்புக்கான உண்மையான அர்ப்பணிப்பை வெளிக்காட்டும்வகையில், மேலும்தாமதமின்றி ஆணைக்குழுவின்தலைவரைநியமிக்குமாறு கோருகிறது.

முக்கியமாக, தகவலறியும் உரிமைச் சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளபடி, நியமிக்கப்படுபவர் பொது வாழ்வில் தம்மை தனித்துவப்படுத்திக் காட்டிய, நிரூபிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் கேள்விக்கிடமற்ற மேன்மையைக் கொண்ட ஒரு தனிநபராக இருப்பதை உறுதி செய்வது அவசியமாகும். இந்த நியமனத்தின் தரம் மற்றும் நேர்மையில் சமரசம் செய்துகொள்வது, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் அர்த்தமுள்ள அமுலாக்கத்தில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

## 30 சதவீத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவிடம் முன்வைப்போம். 30 சதவீத தீர்வை வரி அமுல்படுத்தப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை முகாமைத்துவம் செய்வற்கு அமைச்சு மற்றும் துறைசார் நிறுவன மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்என்றுநிதியமைச்சின்செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரிய பெரும தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

இந்த விசேட ஊடகச் சந்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த உலங்கமுவ மற்றும் வர்த்தகத்துறை அமைச்சின் செயலாளர் விமலேந்திர ராஜா ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் திறைச்சேரியின்செயலாளர்கலாநிதிஹர்ஷண சூரியபெரும வருமாறு குறிப்பிட்டார்,

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் செயற்திட்டத்துக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை செயற்படுத்தி வருகின்ற நிலையில், அமெரிக்காவினால் இலங்கைக்கு அண்மையில் 44 சதவீதமளவில் பரஸ்பர தீர்வை வரி விதிக்கப்பட்டது.

இந்த தீர்வை வரியை அமுல்படுத்தினால் இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரம் மிக மோசமானபாதிப்புக்களைஎதிர்கொள்வதுடன், தேசிய மட்டத்திலான தொழிற்றுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்கு மிக மோசமான

## 30 சதவீத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்பு ஏற்படும் நிலை காணப்பட்டது.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். இந்த பேச்சுவார்த்தையின் பிரதிபலனாக இலங்கைக்கான பரஸ்பர தீர்வை வரி 30 சதவீதமான அமெரிக்க ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 14 சதவீத வரி குறைப்பு சாதகமானதொன்றாகும்.

ஒரு துறையை மாத்திரம் கருத்திற் கொள்ளாமல் சகல துறைகள் குறித்து அவதானம் செலுத்தி தான் தீர்வை வரி விவகாரத்தில் பேச்சுவார்தையில் ஈடுபட்டோம். 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளுக்கு விதிக்கப்படும் தீர்வை வரி வீதத்தை ஆராய்ந்து தற்போது விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத தீர்வை வரி திருத்தத்துக்கான யோசனைகளை அமெரிக்காவிடம் முன்வைப்போம். அமெரிக்காவின் புதிய பரஸ்பர தீர்வை வரி இலங்கையின் ஆடை உற்பத்திக்கு நேரடியாக செல்வாக்கு செலுத்தும்.ஆடை உற்பத்தியில் இருவேறுப்பட்ட வகையில் தீர்வை வரி அறவிடப்படுகிறது. ஆகவே சகல தொழிற்றுறையுடன் கலந்துரையாடி வரி திருத்த யோசனையை முன்வைப்போம்.

இலங்கையை மாத்திரம் இலக்காகக் கொண்டு அமெரிக்கா பரஸ்பர தீர்வை வரியை விதிக்கவில்லை என்பதை குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.பூகோள காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நெருக்கடிக்கு ஒருமித்த தன்மையில் தீர்வு காண வேண்டும்.

30சதவீததீர்வைவரிஅமுல்படுத்தப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை முகாமைத்துவம் செய்வற்கு அமைச்சு மற்றும் துறைசார் நிறுவன மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நெருக்கடிக்கு சிறந்த முறையில் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

## வரி குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

விசேட அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு விதிக்கப்பட்ட வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் ஓரளவு வெற்றியை அவதானிக்க முடிகிறது. காரணம் சில நாடுகளுக்கு எம்மை விட அதிக வரி விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையும் போட்டித்தன்மைக்குள் உள்வாங்கப்பட வேண்டுமெனில் எம்முடன் போட்டியிடும் அமெரிக்காவின் சந்தையிலுள்ள ஏனைய நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

எம்முடன் அதிக போட்டிதன்மை கொண்ட நாடு வியட்நாம் ஆகும். அதனையடுத்து பங்களாதேஷ் காணப்படுகிறது. வியட்நாமுக்கு 20 சதவீதமும், பங்களாதேஷுக்கு 35 சதவீதமும் வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பங்களாதேஷ் தற்போதும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது. வியட்நாம் 20 சதவீதத்தை உறுதிப்படுத்தியுள்ளது. நாம் இந்த விவகாரத்தை அரசியலுக்கு அப்பால் நோக்குகின்றோம்.

இது ஜே.வி.பி. அரசாங்கமா அல்லது ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமா என்பது எமது கவலையல்ல. அனைத்து தரப்பினரும் ஏற்றுமதி தொழிற்துறையுடன் தொடர்புபட்டுள்ளனர். 360 000 தொழிலாளர்கள் ஆடை ஏற்றுமதித்துறையை சார்ந்தவர்களாகவுள்ளனர். மேலும் 550 000 தொழிலாளர்கள் மறைமுகமாக இத்துறையுடன் தொடர்புடையவர்களாகவுள்ளனர். எனவே நாம் அரசியலை புறந்தள்ளி நாட்டுக்காக முன்வர வேண்டும்.

எனவேதான் எம்மிடமிருந்து ஏதேனுமொரு ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாயின் அதனை வழங்குவதற்கு நாம் தயாராக இருப்பதாக நாம் இதற்கு முன்னரே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்திருந்தோம். எவ்வாறிருப்பினும் அரசாங்கத்திடமிருந்து எமக்கு எந்தவகையிலும் அழைப்பு விடுக்கப்படவில்லை. நாம் தற்போது மலை உச்சியில் நிற்கின்றோம். ஒருபுறம் சாய்ந்தால் விழுந்து விடுவோம். மறுபுறம் சென்றால் மீள முடியும். கிடைத்துள்ள இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு நன்மையைப் பெற்றுக் கொள்வோம் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

மீண்டும் ட்ரம்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம். எதிர்க்கட்சி என்ற ரீதியில் அதிகபட்ச ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அரசியலுக்கு அப்பால் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய சந்தர்ப்பமாகவே நாம் இதனைக் காண்கின்றோம். இதனை பாரிய வெற்றியாகக் கருதி அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு செல்லாதிருப்பதை விட, சிறந்த ஆரம்பமாகக் கருதி அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நாம் தயாராகவுள்ளோம் என்றார்.

## மின்சார சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. தேசிய சொத்துக்களை பாதுகாக்கும் அதேவேளை, மின்சாரக்கட்டணத்தை குறைக்கக்கூடியவாறு குறித்த சட்டம் தயாரிக்கப்படும் என்று ஆளும்தரப்பால் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆளும்தரப்பு அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளது. தற்போதைய ஆளும்தரப்பு முன்வைத்துள்ள சட்டமூலம் தொடர்பில் மேல் நீதிமன்றத்தினால் கடுமையான திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட சட்டமூலம் மின்சாரசபைக்கோ, அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை. இது தொடர்பில் நாம் நீதிமன்றத்திலும், நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களிலும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

நாட்டில் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் எழுத்திக் கொடுக்கவில்லை. பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு மாத்திரமே நாணய நிதியம் தெரிவித்துள்ளது. மாறாக சட்டமூலமொன்றை வழங்கி அதனை நடைமுறைப்படுத்துமாறு எதுவும் கூறவில்லை. நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் என்ன என்பதை ஆளும்தரப்பு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே தான் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜைக்கா என்பன அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றன. அதில் கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துக்கும், சர்வதேச நிதி நிறுவனங்களுடனான இணக்கப்பாடுகளுக்கும் முரணாக செயற்பட்டால் பின்னடைவையே எதிர்கொள்ள நேரிடும் என்பதை அரசாங்கமும் ஜனாதிபதியும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

## பாடப்புத்தக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையிலிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் செய்துள்ள பதிவிலேயே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளுக்கு குறைந்த வரிகளை நிர்ணயிக்க இலங்கை தவறியதற்கு பலவீனமான மற்றும் திறனற்ற பேச்சுவார்த்தைகளே காரணமாகும். இலங்கை ஏற்றுமதிகள் மீது 30 சதவீத அமெரிக்க வரி என்பது இந்த அரசாங்கத்தின் திறனற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நாம் செலுத்தும் விலையாகும்.

இந்த விவகாரத்தில் நட்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி முன்னெடுக்கப்படாமைக்கான காரணம் அரசாங்கத்தின் உதாசீனமான நடவடிக்கைகளே ஆகும். இதனால் தற்போதுள்ள 3 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெறுமனே பாடப்புத்தக நிபுணர்களை மாத்திரமே நம்பியிருப்பதால் ஏற்பட்டுள்ள ஆபத்து அமெரிக்கா இலங்கை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் சிறந்த உதாரணமாகும் என எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தம்மிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட 44 சதவீத வரி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டிருக்கும். எவ்வாறிருப்பினும் தற்போது அது 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்குள்ள போட்டி நிலைமை உயர்வடைந்துள்ளது. எனினும் சிறியளவில் ஏற்றுமதி வருமானத்தில் சரிவு ஏற்படக் கூடும்.

புதிய நிலைவரத்தின் அடிப்படையில் தொழில் பாதுகாப்பு பிரச்சினை பாரியளவில் ஏற்படாது. ஆனால் புதிய முதலீட்டாளர்களை அதிகளவில் கவர வேண்டிய தேவை காணப்படுகிறது. எனவே அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியதும் அவசியமாகும். ஆளும்தரப்பு இது தொடர்பில் நேர்மறையாக சிந்தித்து கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஏற்றுமதி தொழிற்துறைகளில் தொழிநுட்பத்தை மேம்படுத்துவது குறித்து உரிய தரப்பினர் அவதானம் செலுத்த வேண்டும். அவ்வாறில்லை எனில் உலக நாடுகளின் துரித அபிவிருத்தி எமக்கு சவாலானதாக அமையும். ஆடை தொழிற்துறையில் மூலப்பொருள் உற்பத்தியாளர்கள் நாட்டில் உள்ளனர். எனவே அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் பட்சத்தில் அதன் ஊடாகவும் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும்.

ஆடை தொழிற்துறை மாத்திரமின்றி ஏனைய துறைகளிலும் மூலப்பொருள் உற்பத்தி முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆளும்தரப்பு ஏற்றுமதி தொழிற்துறையினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## எந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தனது நாட்டுக்கு இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான தீர்வை வரியை அதிகரிப்பதற்கு எடுத்த தீர்மானம், பொதுவாக அனைத்து நாடுகளுக்கும் பாரியதொரு பாதிப்பாகும் குறிப்பாக எம்மைப்போன்ற சிறிய நாடுகளுக்கு தாங்கிக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும். என்றாலும் ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்த வரி அதிகரிப்பில் திருத்தம் மேற்கொண்டு, தற்போது ஒவ்வாரு நாட்டுக்கும் அதிகரிக்கப்பட்ட வரி தொகையை குறிப்பிட்டு கடிதம் அனுப்பி வருகிறார். அதன் பிரகாரம் இலங்கைக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த 44வீத தீர்வை வரி, 30வீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது.

நாடு என்றவகையில் ஏற்கனவே இருந்த தொகையைவிட தற்போது ஓரளவேனும் குறைக்கப்பட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் எமது நாட்டின் தேயிலையில் நூற்றுக்கு 20 வீதம் வரை அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்கிறோம். அதேபோன்று எமது நாட்டின் ஆடை உற்பத்தியில் அதிக வீதம் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்கிறோம். அதேநேரம் இந்த வரி குறைப்புடன் இருக்கும் நிபந்தனைகள் என்ன என்பது தொடர்பில் எங்களுக்கு தெரியாது. அது இன்னும் வெளியாகவில்லை.

அத்துடன் அன்று இந்த நாடு வங்குரா த்து அடைந்தது. வங்குரா த்து அடைந்த நாட்டை ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்று, இருந்த கடன்கள் தொடர்பில் அவர் மறுசீரமைப்பு நடவடிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார். அதனை தொடர்ந்து முன்வைத்தபோது அதனை ஏற்றுக்கொண்டார்கள். அதனால் நாட்டின் நிதி நடவடிக்கைகளை முறையாக பேணி வந்ததால் எங்களுக்கு இந்த வரியை குறைத்து வழங்காமல் இருப்பதற்கு எந்த காரணமும் இல்லை. என்றாலும் இது ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் எடுத்த தீர்மானமாகும் என்றாலும் இன்னும் பல நாடுகளுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்படவில்லை. அதனால் ஏனைய நாடுகளுக்கும் இந்த வரி அதிகரிப்பு வழங்கப்பட்ட பின்னரே இதுதொடர்பில் சரியான ஒரு கருத்தை தெரிவிக்க முடியும். இருந்தபோதும் தற்போது எமக்கு வரி குறைக்கப்பட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச்சியடை முடியும் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமெ. வரி ஏற்படுத்தும் புதிய சவால்கள்

**அமெரிக்கா இலங்கைச் சிற்றொழிற்சாலை மற்றும் ஏற்றுமதி பொருட்களுக்கு விதித்திருந்த 44 சதவீத வரியை தற்போது 30 சதவீதமாகக் குறைத்திருப்பது இலங்கை பொருளாதாரத்துக்கு ஓர் இடைநிறுத்தமான நிம்மதியை வழங்கலாம். இதன் மூலம் சில ஆயிரம் கொடிவிலையில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைக்கும் என்றாலும், இது நிரந்தர தீர்வாகவே அல்லது முன்னேற்றமான பயணமாகவே அமையுமா என்பது கேள்விக்குரியது.**

**அமெரிக்க சந்தை என்பது இலங்கையின் ஏற்றுமதி பொருட்களில் குறிப்பாக துணித் தயாரிப்புகள், தேயிலை, சிறிய தொழிற்சாலை உற்பத்திகள் போன்றவற்றுக்கு முக்கியமான உள்நாட்டு வருமான ஆதாரமாக இருந்துவருகிறது. இந்த வரி சலுகை குறைப்புகுறைந்தபட்சமாகவேனும்நலனளிக்கக்கூடும். இருப்பினும், இவ்வகைத் தடைகள் ஏற்பட்டதற்கான அடிப்படைகாரணங்களைஅரசாங்கமும், தொழிற்துறைப் பிரதிநிதிகளும் புரிந்துகொள்வதே மிக அவசியம். பொதுவாக, வரிவிதிப்புகள் ஒரு நாட்டு ஆளும்தரப்பு வகுக்கும் பன்னாட்டு வர்த்தகக் கொள்கைகளின் பகுதியாகவே அமைகின்றன. இலங்கையின் மனித உரிமைச் சிக்கல்கள், தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு குறைபாடுகள், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் போன்றவை இத்தகைய வரிவிதிப்புகளுக்கு பின்னால் இருக்கும் காரணங்களாக அமையக்கூடும்.**

**இதை எதிர்கொள்ள, முதலாவது நடவடிக்கை ஆக, பன்னாட்டு தரத்திற்கேற்ப தொழிற்சாலைகளின் வேலைநிலைகள், தொழிலாளர்களின் உரிமைகள், பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவை மேம்படுத்தப்படவேண்டும். இரண்டாவது, வர்த்தக ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து, சலுகைகளைத் திரும்பப்பெற அமெரிக்காவின் முன்னணி வர்த்தக அமைப்புகளுடன் உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மூன்றாவது, ஏற்கெனவே இழப்புகளுக்கு உள்ளான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.**

**இதன் பக்கவிளைவாக, சில ஏற்றுமதி நிறுவனங்கள் தங்கள் விலைநிலை போட்டியில் தாங்க முடியாமல் மூடப்படுவதற்கான அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சி, வேலைவாய்ப்பு இழப்புகளுக்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும். எனவே, இது ஒரு பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப கட்டமாகவே இருக்கக்கூடும்.**

**இதைத் தவிர்க்க, இலங்கை விரைவில் புதிய சந்தைகளைத் தேடிச் செல்ல வேண்டும். இந்தியா, சீனா, மத்தியகிழக்கு நாடுகள் போன்ற வரி சலுகை வழங்கக்கூடிய நாடுகளுடன் புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் அமைக்கப்பட வேண்டும். இதேவேளை, உற்பத்தித் தரத்தை உயர்த்தி, இறக்குமதி செய்யும் நாடுகளின் தரச்சான்றுகளைப்பெறும்முயற்சிகளும்தீவிரப்படுத்தப்பட வேண்டும்.**

**இவ்வாறு, அமெரிக்க வரிவிதிப்பில் ஏற்பட்ட மாற்றம் ஒரு எச்சரிக்கை மணி. இது உடனடியாக நிவர்த்தியாகக் காட்டினாலும், நம்முடைய ஏற்றுமதிக் கொள்கையில் ஒரு புதிய சீரமைப்பை வேண்டிக் கொண்டிருப்பதாகவே புரிந்துகொள்ளப்படவேண்டும். நேர்மறைநடவடிக்கைகள் இல்லையெனில், நமக்கெதிரான வரி உயர்வுகள் மீண்டும் தோன்றுவதைத் தவிர்க்க இயலாது.**

# காலம் பதில் சொல்லும், ஆனால்...

**என். சத்திய மூர்த்தி**

செம்மணியில் கிணறு வெட்டப் பூதம் வந்த கதையாக, தொடர்ந்து மனித எலும்புக்கூடுகள் அதன் மிச்சங்களும் தோண்ட தோண்ட தோன்றி வருகின்றன. இந்த கணக்கில் பார்த்தால், பூமியின் மத்திக்கே தோண்டி சென்றாலும், அங்கும், 'உள்ளேன் ஐயா' என்ற வகையில் மனித என்பு தொகுதிகள் தோன்றிய வண்ணம் இருக்கும் என்று கருதவே இடமிருக்கிறது.



பத்திரிகை செய்திகள் தொடர்ந்து அறிவித்து வருவது போல், கைகுழந்தைகளின் எலும்புக்கூடுகள், மற்றும் சிறார்களின் ஒற்றைப் பாதணி, அவர்கள் விளையாடும் பொம்மை போன்றவையும் அந்த சாவுக் குழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை, இதுபோன்ற காட்சிகள், பார்ப்பவர்களின் மனதில் தாக்கம் ஏற்படுத்துதற்காக திரைபடங்களில் தான் தோன்றிஉள்ளது. இனப்போரின்மத்தியிலேயே வாழ்ந்து கெட்டவர்களில்கூட பலரும் உள் மனதின் உணர்வுகளை ஆட்டிப்பார்க்கும் இப்படியொரு நிகழ்வை எதிர்பார்த்திருக்க விட்டுவிடுவார்களோ என்ற எண்ணமும் தோன்றாமல் இல்லை. ஆனால், இன்று வரை செம்மணி குறித்து, தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டுமல்ல, கொழும்பில் டேரா அடித்துள்ள சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களும் அவர்களுடைய அலுவலகங்களும்கூட இது குறித்து அதிகம் பேசினார்கள் இல்லை.

அவர்கள் மட்டுமல்ல. வழமையாக முந்திரிகொட்டை போல முன்னால் நிற்கும் புலம்பெயர்ந்தோரும் வாயடைத்து நிற்கின்றனர். அவர்களுடைய இந்த மௌனம் கள்ள மௌனம் அல்ல என்றும், உண்மையின் ஆழம் உறைத்ததால் தோன்றிய அதிர்ச்சியின் வெளிப்பாடே என்றும் நம்புவோம்.

அதேசமயம், செம்மணி மட்டுமாவது, இன்றுவரை, சுமந்திரனை சுற்றிய சமகால



மாட்டார்கள்.

இல்லை என்று சொல்லாமல், இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் அரசால் கைது செய்யப்பட்டவர்கள், தாங்களே தங்களது புதைகுழிகளைத் தோண்டி வைத்துவிட்டு, அதிலேயே சுடப்பட்டு விழுந்து இறப்பதற்குக் கட்டாயப் படுத்தப்பட்டார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. அது போன்றே ஹிட்லரின் கான்சன்ட்ரேஷன் கேம்ப்-களில் யூதர்களும் பிறரும், விஷவாயு கூடங்களில் கூட்டம் கூட்டமாக அடைக்கப்பட்டு, இலட்ச கணக்கில் உயிர் மாய்த்தார்கள் என்பதும் வரலாறு.

செம்மணி புதைகுழியில் கிட்டத்தட்ட இது போன்றுதான் நடந்திருக்குமோ என்ற கேள்வி எழுகிறது ஆனால், இங்கு விஷவாயு கூடங்கள் இருந்ததற்கு சான்றுகள் இல்லை. குற்றச்சாட்டுகளும் இல்லை. அது போன்றே, இங்கே கொலையுண்ட மக்களும் தாங்களே தங்களது மற்றும் தங்களது குடும்பத்தாரின் புதைகுழிகளை தோண்டவும் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்றும் கூறமுடியாது.

என்ன, வியாபார ரீதியாக இங்குள்ள பத்திரிகைகளும், அரசியல்காரணங்களுக்காக சமூக ஊடகங்களும், 'செம்மணி ஸ்பெஷல்' என்ற அளவிற்கு எடுத்து சென்று 'செம்மணி டூரிஸம்' என்று கொண்டுபோய் தமிழர் அரசியலின் ஓர் அங்கமாக மாறிவிடவில்லை என்பதற்கு அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ் அரசுக் கட்சியின் சிறீதரன்-சுமந்திரன் உள்குத்து அரசியலில் இந்தப் பிரச்சினை பெரிய அளவில் மாட்டிக் கொள்ளவில்லை என்பதும் ஆறுதல் தரும் விடயம்.

**புதுமை இல்லை**

என்றாலும், சிறீதரன் சும்மா இருந்துவிடவில்லை. அண்மையில் செம்மணி விவகாரம் குறித்து அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கூறிய கருத்திற்கு பதிலளிக்கும் விதமாக, குற்றவாளியே தனது குற்றத்திற்கான நீதிபதியாகவும் செயல்படமுடியாது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது, செம்மணி உள்ளிட்ட போர் குற்றங்கள் மற்றும் பொறுப்புகூறல் பிரச்சினைகளுக்கு உள்ளக பொறிமுறைகள் மூலம் மட்டுமே விசாரணை நடத்தப்படும் என்ற ஹேரத்தின் கூற்றிற்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அதைத்0 தொடர்ந்து நாடாளுமன்றத்தின் உள்ளில் சாணக்கியனும், கஜேந்திர குமாரும், செம்மணி குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று அழுத்தம் திருத்தமாக கூறி உள்ளனர். நாடாளுமன்றத்தின் வெளியே இருந்து முன்னாள் அமைச்சர் டக்ளஸ்

தொடர்ச்சி 5ம் பக்கம் ...........

# காலம் பதில்.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தேவானந்தா, ஜனாதிபதி அநுரகுமார திசநாயகாவிற்கு கடிதம் எழுதி உள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றில், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்காவின் அரசிற்காக அமைச்சர் ஹேரத் முன்வைத்த கருத்துகளில் எந்தவித புதுமையும் இல்லை. அது போன்றே, நாடாளுமன்ற உறுப்பினராக சிறீதரனும் புதிதாக எதையும் கூறிவிடவில்லை. இனப்போரின் கடைசி காலகட்டம் தொடங்கி, தொடர்ந்து ஜெனிவாவில் மனித உரிமை அமைப்பின் தீர்மானங்கள் குறித்தும் இதே கருத்துக்களை தான் அரசு மற்றும் தமிழர் தரப்புகளும் முன்வைத்து வந்துள்ளன.

இவர்களில், அரசதரப்பில், பல்வேறு அரசியல் தலைமைகளும் தலைவர்களும் கருத்து தெரிவித்து வந்துள்ளார்கள். என்றாலும் அவர்கள் அனைவருமே சிங்கள-பௌத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் தரப்பில், அதே நபர்கள் அதே சங்கை அதே விதத்தில் தொடர்ந்து ஊதி வருகிறார்கள். மீண்டும் அதனை ஊதி கெடுப்பார்களா என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இல்லை என்று சொல்லாமல், மறைந்த, மறக்கப்பட்ட சம்மந்தனின் அழுத்தம் திருத்தமான உரைகளும், யாருமே படித்து முடிக்காத நீண்ட அறிக்கைகளும் இப்போதெல்லாம் 'மிஸ்ஸிங்'. ஒரு வருடத்திற்கு முன்னர் சம்மந்தனின் பூத உடல் யாழ்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட தருணத்தில், அவருக்கு அளித்த மரியாதையைத்தான் பார்த்தோமே.

அதில் இருந்து தமிழ் அரசு கட்சி தலைமையாவது பாடம் படித்துக்கொண்டு, அவரது முதல் வருட நினைவஞ்சலியை அனைத்து கட்சி நிகழ்வாக முன்னெடுப்பார்கள் என்று யாராவது கருதியிருந்தால், அது தவறு என்றே தோன்றுகிறது. அதாவது, தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோர் வரிசையில் சம்மந்தனுக்கான இடத்தை கொடுப்பதற்கு யாருக்கோ சுணக்கம் என்ற எண்ணமே மிஞ்சுகிறது.

## புரையோடி போன பிரச்சினைகள்

செம்மணி நிகழ்விற்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கோரும் போது, தமிழ் மக்கள் ஆளும் ஜேவிபி கடந்துவந்த பாதையை பார்த்து பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். தமிழ் போராளி குழுக்களை போலவே, ஜேவிபியும் ஒரு கிளர்ச்சியாளர் அமைப்பாக தோன்றியதுதான்.

என்ன, விடுதலை புலிகள் அமைப்பு போன்றவை இங்கே இனபிரச்சினையை மையமாக வைத்து அரசுடன் போரில் இறங்கியது. அங்கே, தெற்கில், ஜேவிபி அமைப்பு, மெஜாரிட்டியான சிங்கள-பௌத்த இனத்தவரிடையே நூற்றாண்டுகளாக வேரூன்றி, புரையோடி போன சமூக-பொருளாதார பிரச்சினைகளை முன்னிறுத்தி இரண்டு முறை, அரசை எதிர்த்து போரிட்டது.

இரண்டின் முடிவும் ஒன்றே. இன்று, பெயர் தெரியாத செம்மணி தியாகிகள், அது போன்றே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று தமிழர்கள் அவலத்தின் பட்டியல் நீள்கிறது. அங்கே, குறிப்பாக, இரண்டாவது ஜேவிபி எழுச்சி காலகட்டத்தில், பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கையும் சொல்லி மாளாது.

தமிழர்கள் பக்கத்தில், ஐநா மனித உரிமை கவுன்சில் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட தாருஸ்மான் அறிக்கை நாற்பதாயிரம் பேர் கடைசி போரில் உயிரிழந்தார்கள் என்று கூறியது.; அன்றும் சரி, இன்றும் சரி, அன்று பாதுகாப்பு படையினரால் கொன்று குவிக்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் குறித்து எந்த ஒரு சர்வதேசமும் சர்வதேச அமைப்பும் வாய் திறக்கவில்லை.

## கையில் உள்ள வெண்ணெய்

அன்று தொடங்கி, இன்றுவரை, ஜேவிபி அமைப்பினர், பழையவை குறித்து பேசாமல், எதிர்காலம் குறித்தே சிந்தித்துச் செயல்பட்டு வந்தனர். அரசு மற்றும் அரசமைப்பின் வெளியே இருந்து அடைய முடியாத பதவி மூலம் தங்களது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உறுதிபூண்டனர். இன்று பதவி கிடைத்ததால் மட்டும் அவர்களால், மக்களுக்கு ஏதாவது செய்ய முடிந்ததா, என்பது வேறு விடயம். ஆனால், கடந்த 2022ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாராவது கேட்டிருந்தால்கூட, இரண்டு ஆண்டுகளில், அந்தக் கட்சியினர் ஜனநாயகத் தேர்தல் மூலம் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்று யாரும் யோசித்துக்கூடப் பார்த்திருக்கமுடியாது. ஏன், ஜனாதிபதி அநுர அவ்வாறு கனவு கூடக் கண்டிருக்கமாட்டார். இதுதான் வெற்றியின் இரகசியம்.

இங்குதான், தமிழ் தலைமைகள் தொடர்ந்து தங்களது தவறான மனப்பான்மை மற்றும் அணுகுமுறைகளால் கையில் கிடைத்தவற்றையும் தொடர்ந்து இழந்து வந்திருக்கிறார்கள். கையில் உள்ள வெண்ணெயைவிட, எங்கோ இருக்கும் நெய்க்காக ஆலாய் பறந்து வந்துள்ளார்கள். இப்போதும், அவ்வாறே தொடர்கிறார்கள்.



இன்னும் சொல்லப்போனால், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஒவ்வொரு நாடாளுமன்ற தேர்தலிலும் சுமார் ஐம்பது தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இனப்போர் முடிந்த காலத்தில்கூட, மொழிவாரியாக அவர்களை ஒருங்கிணைத்து ஒரு சில பிரச்சினைகளிலாவது ஒன்றாகச் செயல்படுவதற்கு அன்றிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தவித முன்னெடுப்புகளையும் செய்யவில்லை என்பது வருந்தத்தக்கது.

பச்சையாக சொல்லப்போனால், மாகாணசபை தேர்தல் வந்தால் மட்டும், கிழக்கை மனதில் கொண்டு, முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமை சம்மந்தன் சந்திப்பார். மற்றபடி, பிற முஸ்லீம் கட்சிகள் மற்றும் மலையக தமிழ் தலைமைகளை வட மாகாணத் தலைமைகள் சந்தித்ததாக சரித்திரம் இல்லை. பின்னர், அவர்கள் எப்படி, தமிழ் பேசும் சிங்கள அரசியல்வாதிகளுடன் ஒரு 'காமன் அஜெண்டா' குறித்து கதைத்திருப்பார்கள்?

## ஓவர் டைம் வேலை

ஆனால், தந்தை செல்வா காலம், தொடர்ந்து, அமிர்தலிங்கம், பின்னர் சம்மந்தன் ஆகியோரது கீழே, அவ்வப்போதைய அரசுகள் முன் வைத்த தீர்வுத் திட்டங்களை தமிழர் தரப்பு புறக்கணித்தே வந்துள்ளது. இவர்களுக்கு அப்பால், விடுதலை புலிகள் அமைப்பு, அரசின் தீர்வு திட்டங்களை புறக்கணிப்பதற்கே பேச்சுக்களில் தொடர்ந்து கலந்துகொண்டது.



இந்துப் புறக்கணிப்புகளை, மிதவாதிகளும் தீவிரவாதிகளும் நியாயப்படுத்தி வந்திருக்கிறார்கள். இன்றளவும், தமிழ் அரசியல் தலைமைகளின் நியாயப்படுத்தல்களை விட, விடுதலை புலிகளின் வாதங்களே பாராட்டப்படுகின்றன. ஏதோ, மிதவாதிகள் எதுவுமே பெற்றுதராத போது, தீவிரவாத அமைப்பு மட்டும் தமிழர்களின் கோரிக்கைகளுக்கான முடிவை வெற்றிகரமாக பெற்றுதந்தது போலவும் ஒரு இமேஜ் உருவாகிவிட்டது. அதனை அவ்வப்போது, முன்னிறுத்தி விவாதபொருளாக்குவதற்காக, இங்கும் புலம்பெயர்ந்தோரிடையேயும் பல குழுக்கள் 'ஓவர் டைம்' வேலை செய்கின்றன.

இதன் காரணமாகவும், இன்று செம்மணி சாவுகளுக்கான நியாயத்தை உள்நாட்டு பொறிமுறைகள் வழி பெற்றுக்கொள்ள விழையாமல், சர்வதேச பொறிமுறை என்றெல்லாம் இன்னமும் ஒரு சிலர் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இங்குள்ளவர்களை நம்பவைத்தும் வருகிறார்கள்.

வழிபாடு கூட்டம்

ஆனால், அண்மையில் செம்மணி உள்ளிட்ட தமிழர் பகுதிகளுக்கும் தலைநகர் கொழும்புவிற்கும் விஜயம் செய்த ஐநா மனித உரிமை ஆணையர் வோல்கர் டுர்க் பத்திரிகையாளர்கள் சந்திப்புகளில் கூறிய விடயங்களைவைத்து நோக்கினால், அவர்களால் இங்கு எந்தவித அரசியல் தீர்வும் வந்துவிடாது என்ற எண்ணமே மிஞ்சுகிறது. ஏன், அவர்கள் கூறும் போர் குற்ற விசாரணைகளும் பொறுப்புகூறலுக்கான பொறிமுறைகளும் கூட செயல்படுத்தப்பட போவதில்லை.

இன்னும் சொல்லப்போனால், அடுத்த மாதம் நிகழ இருக்கும் ஐநா. மனித உரிமைகள் பேரவையின் வழமையான 'வழிபாடு' கூட்டத்தில் செம்மணி குறித்து மேலை நாட்டவர்கள் பேசினாலும், அதனையும் அவர்களது அடுத்த தீர்மானத்தில் உள்ளடக்கினாலும், அதும் செயல்படுத்துப்படாத சின்னமாகவே நிற்கும். அதற்கு இங்குள்ள உள்ளக நீதி பரிபாலனத்தின் கீழ் ஏதாவது முன்னேற்றம் ஏற்படலாம். செம்மணி சாவுகளுக்கு காரணகர்த்தர்களை சிறைக்கு அனுப்பும் வைபவம்கூட அரங்கேறலாம்.

எப்போது, இந்த அரச தலைமை, ராஜபக்சக்களை அரசில் இருந்தும் அரசியலில் இருந்தும் ஒழிப்பதற்கு மேற்குலக நாடுகளால் அடையாளம் காணப்பட்டு அரகலயா காலத்தில் முன்னிறுத்தப்பட்டதோ, அப்போதே, சர்வதேசத்தின் மனவோட்டத்தை தமிழர்கள் புரிந்துகொண்டிருக்கவேண்டும். அதேசமயம், எப்போது, வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை அணுகி 2006ம் ஆண்டே தங்களுக்கு ஆதரவான தீர்ப்பை பெற்றுக்கொண்டார்களோ, அப்போதே ஜேவிபி-யின் கையும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஓங்கிவிட்டது.

இப்போது, தமிழர்கள் செய்யவேண்டியது எல்லாம், தொடர்ந்து சாட்சிகாரன் காலில் விழுந்து கிடக்க வேண்டுமா, அல்லது சண்டைகாரனுடன் சமரசத்திற்கு முயற்சிக்க வேண்டுமா, என்பது குறித்து முடிவு செய்வதுதான். இதற்கெல்லாம் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால், கடல் அலையும் காலமும் யாருக்கும் காத்திருக்காது!




# காத்து நிற்கும் கந்தசஷ்டி கவசம்

கந்தப் பெருமானை மனமெண்ணி நிற்கின்ற அடியவர்கள் ’ கந்தசஷ்டி விரதத்தை ’ வாழ்விலே பெரும் விரத மாகவே கொண்டிருக்கிறார்கள். கந்தசஷ்டி வருவதை உன்னிப்பாய் கவனித்தபடியும் இருப்பார்கள். இந்தியா , இலங்கை எங்கனும் இருக்கின்ற கந்தனது அடியார்கள் கந்தசஷ்டியைக் கண்ணுங் கருத்துமாய் கடைப்பிடித்தே வருகிறார்கள். கந்தசஷ்டி என்றதும் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நல்லைக் கந்தனே வந்து நிற்பார். நல்லைக்கந்தன் சன்னிதானத்தில் பல அடியார்கள் கந்தசஷ்டி காலங்களில் கந்தனின் பூசையினைக் கண்டு அங்கு கொடுக்கும் தீர்த்தத்தை மட் டுமே பருகி – ஆறு தினங்களுமே எதுவுமே சாப்பிடாமல் விரதம் அனுட்டி ப்பார்கள் என்பது முக்கியமாகும். நல்லூர் வரமுடியாத அடியார்கள் தங்கள் வீட்டிலேயே கடும் விரதமாய் இருப்பார்கள் – இன்றும் பலர் விரதத்தை விடாமல் அனுட்டிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாண த்தில் பலர் பல வருடங் களாகவே இடை விடாது தொடர்ந்து கந்தசஷ்டி யைக் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதும் மனங்கொள்ளத் தக்கதேயாகும். நீரை மட்டும் அருந்துவார் சிலர்.மாலையில் பாலை மட்டும் பருகுவார் சிலர்.பா லையும், ஒரு பழத்தையும் மாலையில் எடுப்பாரும் இருக்கி றார்கள். முதியவர்கள் மட்டுமன்றி – இளைஞர்களும் கூட கந்தசஷ்டியை




பக்தி பூர்வமாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்பது மனங்கொள்ளத்தக்கதேயாகும்.

கந்தசஷ்டி நோற்கும் காலங்களில் யாவருமே கந்தசஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்வார்கள். கோவில்களில்களில்விரதமிருக்கஅடியார்கள்யாவரும் ஒன்று சேர்ந்து பாடுவதற்கு வசதியாக – கந்தசஷ்டி கவசத்தை ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பும் வழக்கம் இடம்பெற்றும் வருகிரது. கந்தசஷ்டி கவசத்தை மனனம் செய்யாமல் இருப்பவர்களுக்கு இப்படிச் செய்வது மிகவும் பொருத்தமாய் அமைகிறது.ஆனால் பெரும்பாலனவர்கள் கந்தசஷ்டி கவசத்தை மனப்பாடம் செய்தே வைத்திருப்பார்கள்.கந்தப் பெரு மானை மனமெண்ணிப் பாடும்பொழுது அப்பாடல் எங்களுக்கெல்லாம் மிகவும் சிறந்த பாதுகாப்புக் கவசமாய் அமைகிறது என்பதால்தான் அப்பக்தி துதிக்கு ’ கந்தசஷ்டி கவசம் ’ என்று பெயர் அமைந்ததோ என எண்ணிடத் தோன்றுகிறது.

கந்தசஷ்டி கவசம் இலகுவான மொழிநடையில் அமைந்திருக்கிறது. இசையுடன் பாடவும் பொருத்தமாய் அமைந்திருக்கிறது.கந்தசஷ்டி கவச த்தை பலரும் மனப்பாடம் செய்து வைத்திருந்தாலும் அதில் பொதிந்திரு க்கும் தத்துவத்தை பெருதும் கண்டு கொள்ளுவதே இல்லை. கந்தசஷ்டி கவசத்தை உன்னிப்பாய் கவனித்தால் அதில் பொதிந்திருக்கும் பொக்கிஷ ங்களைக் கண்டு கொள்ளலாம். அவற்றை மனமிருத்துதல் வாழ்க்கைக்கு அவசியமாகும். பக்திப்பாடல்கள் பாடப்படுவதால் மனதில் நல்ல மாற்றங் கள் ஏற்படுகின்றன. சாதாரண பாடல்களும் தருகின்ற இன்பம் வேறு. அப் பாடல்களினால் ஏற்படும் உளநலம் வேறு.சாதாரண பாடல்கள் பார்க்கும் பார்வைவேறு. பக்திப்பாடல்கள் பார்க்கும் பார்வை வேறு.அந்த வகையில் கந்தசஷ்டி கவசம் தருகின்ற கருக்கள் உடலையும்,உள்ளத்தையும் தூய் மையாக்கவும் , உறுதிப்படுத்தவும், நல்லுணர்வுகளை ஏற்படுத்தவும் உறு துணையாகி நிற்கின்றன என்பதை யாவரும் மனமிருத்துதல் அவசியமாகும்.

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி**
**இயக்குநர்**
**மெல்பேண் - ஆஸ்திரேலியா.**




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2025இல் வெளியிடப்பெற்றது